بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/06/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 21 யமாமா போரில் சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய மகத்துவமிக்க தியாகங்கள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய குறிப்பில் யமாமா போர் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இதுதொடர்பாக **ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:-** நான் இபாத் பின் பஷர் இவ்வாறு கூறக் கேட்டேன்: **'**அபூ ஸயீதே**!** நாங்கள் புஸாஹாவிலிருந்து விடுபட்டதும் அன்றிரவு நான் கனவில், வானம் திறக்கப் பட்டு விட்டதாகவும் பிறகு என் மீது மூடப் பட்டு விட்டதாகவும் கண்டேன். இதன் பொருள் ஷஹாதத் ஆகும்.**'**

அபூ ஸயீத் அவர்கள், **'**நான் இன்ஷா அல்லாஹ் என்ன நடந்தாலும் நல்லதாகவே நடக்கும் என்று கூறினேன்**'** எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூ ஸயீத் அவர்கள், **'**நான் இபாத் பின் பஷர் அவர்களின் ஷஹாதத்துக்கு பிறகு அவர்களைப் பார்த்தேன். அவர்களது முகத்தில் மிக அதிகமாக வாளின் அடையாளங்கள் இருந்தன. நான் அவர்களை அவர்களது உடலில் இருந்த ஓர் அடையாளத்தைக் கொண்டு கண்டறிந்தேன்**'** என்று கூறுகிறார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பிறகு ஹஸ்ரத் உம்மு அம்மாராவின் குறிப்பு வருகின்றது. உம்மு அம்மாரா இஸ்லாமிய வரலாற்றில் மிக வீரமிக்க பெண்மணிகளுள் ஒருவராக இருந்தார்கள். சஹாபியாவாக இருந்தார்கள். உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். மேலும் மிகவும் வீரத்துடன் போரிட்டார்கள். உம்மு அம்மாரா யமாமா போரைப் பற்றி கூறுகின்றார்கள். அவர்களது மகன் அப்துல்லாஹ் முஸைலமா கஸ்ஸாபைக் கொன்றார். ஹஸ்ரத் உம்மு அம்மாரா அன்றைய தினம் தாமும் யமாமா போரில் கலந்து கொண்டிருந்தார்கள். அதில் அன்னாரது ஒரு கை வெட்டுப்பட்டு விட்டது.

**ஹஸ்ரத் உம்மு அம்மாரா இந்தப் போரில் கலந்து கொண்டதற்கான காரணமாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது:** ஓமனிலிருந்த அன்னாரது மகன் ஹபீப் பின் ஸைத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மரணத்தின் செய்தியைக் கேள்விப்பட்டு ஓமனிலிருந்து மதீனா வந்து கொண்டிருந்தார். முஸைலமா அவர்களைப் பிடித்து விட்டான். மேலும் **'**நான் அல்லாஹ்வின் தூதன் என்று நீர் சாட்சி கூறுகின்றீரா**?'** என்று கேட்டான். அதற்கு ஹபீப் அவர்கள் எனக்குக் கேட்காது என்று கூறினார்கள்.

பிறகு முஸைலமா ‘முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்று நீர் சாட்சி கூறுகின்றீரா?’ என்று கேட்டான். ஹபீப் (ரலி) அவர்கள் ஆம் என்று கூறினார்கள். முஸைலமா, அவர்கள் குறித்து கட்டளையிட்டான் எனவே அவர்கள் துண்டு துண்டாக ஆக்கப்பட்டார்கள். முஸைலமா நான் ‘அல்லாஹ்வின் தூதன் என்று நீர் சாட்சி கூறுகிறீரா?’ என்று கேட்கும் போதெல்லாம், அவர்கள் என்னால் கேட்க முடியாது என்று பதிலளித்தார்கள். மேலும் ‘நீர் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சி கூறுகிறீரா?’ என்று கேட்கும்போது ஆமென்று பதிலளிப்பார்கள். எதுவரை என்றால், அவன் அன்னாரது ஒவ்வோர் உறுப்பையும் வெட்டி எறிந்தான்.

ஹஸ்ரத் உம்மு அம்மாரா அவர்களுக்குத் தமது மகனின் ஷஹாதத் பற்றிய செய்தி கிடைத்ததும், அவர்கள் தாமே முஸைலமா கஸ்ஸாபை எதிர் கொள்வார்கள் என்றும் ஒன்று அவனைக் கொலை செய்வார்கள் அல்லது தாமே இறைவழியில் ஷஹீத் ஆகி விடுவார்கள் என்றும் சத்தியம் செய்தார்கள். இந்தப் போரில் அன்னாரது மற்றொரு மகன் அப்துல்லாஹ்வும் கலந்து கொண்டிருந்தார்.

**உம்மு அம்மாரா கூறுகிறார்கள்:** நாங்கள் யமாமா சென்றடைந்தபோது கடும் போர் நடைபெற்றது. நான் இறைவனது எதிரியான முஸைலமாவை எதிர்கொள்ள அவனைப் பார்த்துக் கொள்ள உறுதி பூண்டேன். நான் அல்லாஹ்விடம், ‘ஒருவேளை நான் அவனைக் கண்டால் அவனை விடமாட்டேன். அவனைக் கொல்வேன் அல்லது நானே இறந்து விடுவேன்’ என்று உறுதி எடுத்தேன். இவ்வாறாக நான் அல்லாஹ்வின் எதிரியைக் கண்டேன். நான் அவன் மீது தாக்குதல் தொடுத்து விட்டேன். ஒரு மனிதன் எனக்கு முன்னே வந்தான். அவன் என்னுடைய கையில் தாக்கி, அதனை வெட்டி விட்டான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அந்தத் தீயவன் வரை சென்று அடைய வேண்டும் என்பதற்காக கலக்கம் அடையவில்லை. மேலும் அவன் நிலத்தில் வீழ்ந்து கிடந்தான். நான் எனது மகன் அப்துல்லாஹ்வை அங்கு கண்டேன். அவன் அவனைக் கொன்றுவிட்டு இருந்தான்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் உள்ளது. **ஹஸ்ரத் உம்மு அம்மாரா அறிவிக்கின்றார்கள்:** எனது மகன் தனது ஆடையால் தனது வாளை சுத்தப் படுத்திக் கொண்டிருந்தான். நான் அவனிடம், ‘நீ முஸைலமாவைக் கொன்று விட்டாயா?’ என்று கேட்டேன். அதற்கு அவன், ‘ஆம் எனது தாயே!’ என்று கூறினான். நான் அல்லாஹ்வுக்கு முன் நன்றிக்கான சஜ்தா செய்தேன். ஹஸ்ரத் உம்மு அம்மாரா கூறுகின்றார்கள்: அல்லாஹ் எதிரிகளின் வேரை அறுத்து விட்டான். போர் முடிவடைந்ததும் நான் எனது வீட்டிற்குத் திரும்பிச் சென்றேன். அப்போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் ஓர் அரேபிய மருத்துவரை என்னிடம் அழைத்து வந்தார்கள். அவர் கொதிக்கும் எண்ணையைக் கொண்டு எனக்கு சிகிச்சை அளித்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த சிகிச்சை எனக்கு கை வெட்டுப்பட்டதைவிட அதிக வேதனைக்குரியதாக இருந்தது. ஹஸ்ரத் காலித் அவர்கள் என்னை மிக நன்றாக கவனித்துக் கொண்டார்கள். மேலும் எங்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். எங்களது உரிமையை எப்போதும் நினைவில் கொண்டிருந்தார்கள். மேலும் எங்களைக் குறித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிய அறிவுரையைக் கருத்தில் கொண்டிருந்தார்கள்.

யமாமா போரில் முஸ்லிம்களில் காயமுற்றவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. மேலும் காயங்களின் காரணமாக அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்களில் மிகக் குறைவான எண்ணிக்கையில் உடையவர்களே ஹஸ்ரத் காலித் அவர்களுடன் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். ஓர் அறிவிப்பில் இதுவும் உள்ளது. ஹஸ்ரத் உம்மு அம்மாரா யமாமாவின் நாளில் காயமுற்றார்கள். வாள்

மற்றும் ஈட்டியின் 11 காயங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன. அதுமட்டுமின்றி அவர்களது ஒரு கை வெட்டுப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களது நிலையை விசாரிக்க வந்து சென்று கொண்டிருந்தார்கள். கஅப் பின் உஜ்ரஹ் அன்றைய தினம் கடினமாகப் போரிட்டார்கள். அந்நாளில் மக்களுக்குக் கடுமையான துன்பத்தை தாங்க வேண்டி வந்தது. மேலும் மக்கள் தோல்வியடைந்து ஓடியவாறு படையின் இறுதி பகுதியையும் தாண்டி விட்டார்கள்.

கஅப், 'அன்ஸாரிகளே! அன்ஸாரிகளே! அல்லாஹ் மட்டும் தூதரின் உதவிக்கு வாருங்கள்' என்று அழைத்தார். இவ்வாறு கூறியவாறே அவர் முஹ்கம் பின் துஃபைலை சென்றடைந்தார். முஹ்கம் அவரைத் தாக்கினான். மேலும் அன்னாரது இடக் கையை வெட்டி விட்டான். அல்லாஹ்வின் மீதாணையாக! கஅப் அதற்குப் பிறகும் கூட தடுமாற்றம் அடையவில்லை. மேலும் இடக்கையில் இருந்து ரத்தம் வழிந்தோடி கொண்டிருக்கும் வேளையில் வலக்கையால் தாக்குதல் தொடுத்தார்கள். பிறகு அபூ உகைல் பற்றி வருகின்றது. அபூ உகைல் அன்ஸாரிகளின் உதவியாளராக இருந்தார்கள். அன்னார் யமாமாவின் தினத்தில் எல்லாருக்கும் முன்பாக போருக்காகப் புறப்பட்டார்கள். அன்னார் மீது ஓர் அம்பு பட்டது. அது தோள்பட்டையைத் துளைத்தவாறு இதயத்தை அடைந்தது. அன்னார் அந்த அம்பை இழுத்து வெளியே எடுத்தார்கள். அன்னார் அந்தக் காயத்தால் பலவீனம் அடைந்து விட்டார்கள்.

அன்னார், 'அன்ஸாரிகளே! எதிரிகள் மீது தாக்குதல் தொடுக்க திரும்புங்கள்' என்று மஅன் பின் அதீ கூறக் கேட்டார்கள். **அம்ர் கூறுகிறார்கள்:** அபூ உகைல் தமது மக்களை நோக்கி செல்வதற்காக எழுந்தார்கள். நான் அவரிடம் அபூ உகைலே! 'தங்களிடம் போருக்கான தைரியம் தற்போது இல்லை. மிகவும் பலவீனமாகி விட்டீர்கள். தங்களது எண்ணம் என்ன?' என்று கேட்டேன். அதற்கு அன்னார், 'அழைப்பவர் எனது பெயரைக் கூறி அழைத்தார்' என்று பதிலளித்தார்கள். அவர்கள் அன்ஸாரிகளின் பெயரை மட்டுமே அழைத்தார்கள். காயமடைந்தவர்கள் அவர்களது நோக்கம் அல்ல என்று நான் கூறினேன். அதற்கு அபூ உகைல், 'நான் அன்ஸாரைச் சார்ந்தவன் ஆவேன். மற்றவர்கள் பலவீனத்தைக் காண்பித்தாலும் நான் அவசியம் பதில் கூறுவேன்' என்று கூறினார்கள். இப்னு உமர் கூறுகிறார்கள்:

'அபூ உகைல் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு எழுந்தார்கள். தமது வலது கையில் உருவிய வாளை ஏந்தி, பிறகு, 'அன்ஸாரிகளே! ஹுனைன் தினத்தைப் போன்று திரும்பி தாக்குங்கள்' என்று கூறத் தொடங்கினார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டார்கள். மேலும் எதிரிகளுக்கு முன் முஸ்லிம்களின் கேடயம் போன்று ஆகிவிட்டார்கள். எதுவரை என்றால் அவர்கள் எதிரிகளைத் தோட்டத்திற்குள் தள்ளினார்கள். அவர்கள் தங்களுக்குள் கலந்தார்கள். அதாவது உள்ளே சென்று, பிறகு போர் தீவிரம் அடைந்தது. மேலும் வாள்கள் ஒன்றோடொன்று உராய தொடங்கின. நான் அபூ உகைலைப் பார்த்தேன். அன்னாரது காயமடைந்த கை தோளிலிருந்து வெட்டுண்டது. மேலும் அன்னாரது அந்த கை நிலத்தில் விழுந்தது. அவர்களுக்கு 14 காயங்கள் ஏற்பட்டன. அவ்வனைத்துக் காயங்களின் காரணத்தினால் அன்னார் ஷஹீதானார்கள்.

**இப்னு உமர் கூறுகிறார்கள்:** நான் அபூ உகைலுக்கு அருகில் சென்றேன். அவர் நிலத்தில் விழுந்து கிடந்தார். இறுதி மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார். நான் அபூ உகைலே என்று கூறினேன். அதற்கு அவர் தடுமாறிய நாவால் லப்பைக் என்று கூறினார். பிறகு யாருக்குத் தோல்வி ஏற்பட்டது என்று கேட்டார்கள். நான் உரத்த குரலில், 'நற்செய்தி உண்டாகட்டும்! அல்லாஹ்வின் எதிரி முஸைலமா

கொல்லப்பட்டான்' என்று கூறினேன். அவர்கள் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறியவாறு தமது விரலை விண்ணை நோக்கி உயர்த்தி உயிரை விட்டார்கள்.

**இப்னு உமர் கூறுகிறார்கள்:** நான் எனது தந்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இந்த அனைத்து சம்பவங்களையும் எடுத்துக் கூறினேன். அதற்கு அவர்கள், 'அல்லாஹ் அவர் மீது கருணை புரியட்டும். அவர் எப்போதும் ஷஹாதத்தை நாடியவராக இருந்தார். மேலும் எனக்குத் தெரிந்தவரை அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது குறிப்பிட்ட சில சஹாபிகளில் ஒருவராக இருந்தார். மேலும் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் ஒருவராக இருந்தார்' என்று கூறினார்கள்.

யமாமா போருக்குப் பிறகு ஒருநாள் முஜாஆ பின் முராரா ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம், 'ரஸூலின் கலீஃபாவே! யமாமா போரில் கலந்துகொண்ட சஹாபிகளை விட அதிகமாக எவரையும் வாள்களின் தாக்குதல்களுக்கு முன்னால் நிலைத்து நின்றுவாறு நான் பார்த்ததில்லை. அதேபோன்று அவர்களைவிட அதிகமாக கடுமையாக தாக்குதல் தொடுத்தவர்களையும் பார்க்கவில்லை' என்று கூறினார்கள். முஜாஆ ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம், மஅன் பின் அதீ மற்றும் அன்ஸாரிகளின் சிறந்த உறுதிப்பாடு மற்றும் அச்சமின்றி போரிட்டவாறு நிகழ்ந்த அவர்களுடைய ஷஹாதத் பற்றிய விஷயங்களை கூறிக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அதனைக் கேட்டு அழ ஆரம்பித்தார்கள். எதுவரை என்றால், அன்னாரது அருளுக்குரிய தாடி கண்ணீரால் நனைந்து விட்டது.

**மஹ்மூத் பின் லபீத் இடமிருந்து ஓர் அறிவிப்பு வருகிறது.** ஹஸ்ரத் காலித் அவர்கள் யமாமா வாசிகளைக் கொலை செய்தபோது, முஸ்லிம்களும் அந்தப் போரில் பெருமளவு எண்ணிக்கையில் ஷஹீதானார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பெருவாரியான சஹாபிகளும் ஷஹீதாகி விட்டார்கள். முஸ்லிம்களில் உயிர் பிழைத்தவர்கள் மிகவும் காயமுற்று இருந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் அவர்களுக்கு முஸைலமா கொல்லப்பட்ட தகவல் கொடுக்கப்பட்டதும் அவர்கள் முஜாஆவை முஸைலமாவை அடையாளம் காட்ட வைப்பதற்காக சங்கிலியிட்டு உடன் கொண்டு வந்தார்கள். அவன் சடலங்களில் அவனைத் தேடிப் பார்த்தான். ஆனால் அங்கு முஸைலமா கிடைக்கவில்லை. பிறகு அவன் தோட்டத்திற்குள் நுழைந்தான். அப்போது ஒரு குள்ளமான செந்நிறமான தட்டையான மூக்குடைய மனிதனின் சடலம் தென்பட்டது. 'யாரிடம் இருந்து நீங்கள் விடுதலை அடைந்து விட்டீர்களோ அந்த முஸைலமா இவன்தான்' என்று முஜாஆ கூறினான்.

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கனவைப் பற்றிய குறிப்பு உள்ளது.** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களை யமாமாவுக்கு அனுப்பிய போது அன்னார் கனவு கண்டார்கள். அன்னாரிடம் ஹஜர் பகுதி இருக்கிறது. அதன் பேரீத்தம் பழங்களுள் சில பேரித்தம் பழங்கள் கொண்டு வரப்பட்டன. அன்னார் அதிலிருந்து ஒரு பேரித்தம் பழத்தை உண்டார்கள். அதனை அன்னார் கொட்டையாக கண்டார்கள். அதாவது அது பேரீத்தம் பழம் அல்ல. மாறாக கொட்டையாகும். சிறிதுநேரம் அன்னார் அதனை மென்றார்கள். பிறகு அதனை எறிந்து விட்டார்கள். அன்னார் இதற்கு 'காலித் அவர்களுக்கு யமாமா வாசிகள் தரப்பிலிருந்து கடுமையான போரை சந்திக்க வேண்டி இருக்கும். மேலும் அல்லாஹ் நிச்சயமாக அவரது கைகளில் வெற்றியை வழங்குவான்' என்று விளக்கம் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் யமாமாவின் புறத்திலிருந்து வருகின்ற செய்திகளுக்காக மிகவும் எதிர்பார்த்தவர்களாக இருந்தார்கள். மேலும் காலித் அவர்கள் தரப்பிலிருந்து தூதுவர் எவரும் வந்தால், அன்னார் அவரிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வார்கள்.

**கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து கூறப்படுகின்றது.** இந்தப் போரில் கொல்லப்பட்ட முர்தத்களின் எண்ணிக்கை சுமார் 10 ஆயிரமாக இருந்தது. மற்றும் ஓர் அறிவிப்பில் இருபத்தி ஓராயிரம் என்றும் கூறப்பட்டுள்ளது. சுமார் 500 அல்லது 600 முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். சில அறிவிப்புகளில் யமாமா போரில் ஷஹீதான முஸ்லிம்களின் எண்ணிக்கை 700, 1200, 1700 என்றும் கூறப்பட்டுள்ளது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இந்தப் போரில் ஷஹீதானவர்களுள் 700க்கும் அதிகமான திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள் இருந்தார்கள். இந்த ஷஹீதானவர்களுள் பெரிய சஹாபிகளும் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களும் அடங்குவர். அவர்களின் அந்தஸ்து மற்றும் தகுதி முஸ்லிம்களிடம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அவர்களது ஷஹாதத் ஒரு பெரும் கவலையாக இருந்தது. ஆனால் இந்த திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களது ஷஹாதத் தான், பின்னாளில் திருக்குர்ஆனை ஒன்று திரட்டுவதற்குக் காரணமாக அமைந்தது.

**இந்த ஷஹீதுகளுள் பிரசித்திபெற்ற சில சஹாபிகளின் பெயர்கள் இவ்வாறாகும்:** ஹஸ்ரத் ஸைத் பின் கத்தாப், ஹஸ்ரத் அபூ ஹுதைஃபா பின் ரபீஆ, ஹஸ்ரத் ஸாலிம் மௌலா அபூ ஹுதைஃபா, ஹஸ்ரத் காலித் பின் உஸைது, ஹஸ்ரத் ஹகம் பின் ஸயீது, ஹஸ்ரத் துஃபைல் பின் அம்ர் தௌஸி, ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாமின் சகோதரர் ஹஸ்ரத் ஸாயிப் பின் அவ்வாம், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் பின் கைஸ், ஹஸ்ரத் இபாத் பின் ஹாரிஸ், ஹஸ்ரத் இபாத் பின் பஷர், ஹஸ்ரத் மாலிக் பின் அவ்ஸ், ஹஸ்ரத் ஸுராக்கா பின் கஅப், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பேச்சாளர் ஹஸ்ரத் மஅன் பின் அதீ, ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷிமாஸ், ஹஸ்ரத் அபூ துஜானா, முனாஃபிக்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் ஒபை பின் ஸுலூலின் உண்மை நம்பிக்கையாளரான மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் மற்றும் ஹஸ்ரத் யஸீது பின் ஸாபித் கஸ்ரஜீ ஆகியோர்.

சில வரலாற்றாசிரியர்களைப் பொறுத்த வரையில், யமாமா போர் ரபியுல் அவ்வல் 12 ஹிஜ்ரியில் நடைபெற்றது. மேலும் சிலர் இது ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்றது என்று கூறுகிறார்கள். இவ்விரு அறிவிப்புகளின் இணக்கம் இவ்வாறு இருக்க முடியும். அதாவது இந்தப் போரின் ஆரம்பம் ஹிஜ்ரி 11 இலும் அதன் முடிவு ஹிஜ்ரி பன்னிரெண்டிலும் இருக்கலாம்.

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَن یَّھْدِہِ

اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ أَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رحمکم اللّٰہ اِنَّ اللّٰہَ

یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ

یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**